Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 23, 2022

புதன்கிழமை நவம்பர் 23, 2022 | ஒளி: 08 கதிர்: 149 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




## பட்ஜெட் பாஸ்

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 37 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று (22) நிறைவேறியது. ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

நாட்டின் முன்னேற்றத்தை தடுப்பதற்கு

# சர்வதேச சக்திகள் சதி

நாட்டில் சர்வதேசத்தின் தலையீடுகள் தீவிரமடைந்துள்ளதாகவும், அவர்களின் நோக்கமே கடந்த சில மாதங்களுக்கு முன்னர் செயற்படுத்தப்பட்டதாகவும், தெரிவித்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச சக்திகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன என்றார். பாராளுமன்றத்தில் நேற்று (22) நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தற்போது பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என குறிப்பிடுபவர்கள், கடந்த காலங்கள் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் குறுகிய காலத்தில் அதிக வெளிநாட்டு கடன்களை பெற்றது. தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு கடன் பெற்றுக் கொண்டது. இது பாராளுமன்றமும் நாட்டு மக்களும் அறியாத விடயமல்ல. பொருளாதார பாதிப்புக்கு தற்போது தீர்வுகாண ஆலோசனை வழங்குபவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் இருந்ததை மறந்து விட்டார்கள் என்றார்.

தொடர்ச்சி P2



ஜனாதிபதி ரணிலை

## சந்தேக கண்ணோட்டத்திலேயே பார்க்கிறோம்



நீண்ட காலமாக நாட்டில் நிலவும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமையை சந்தேக கண்ணோட்டத்திலேயே தாம் பார்ப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## ஜனநாயகத்தை பலப்படுத்தியே சவால்களை வெற்றிகொள்ள முடியும்

### முன்னாள் சபாநாயகர் அமெரிக்க தூதுவரிடத்தில் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன அவசியமாகும். அத்துடன் பாராளுமன்ற கண்காணிப்பு குழுக்களை வலுப்படுத்துவது அவசியம் என்ற விடயங்களை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடனான சந்திப்பில் முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார். மேலும் ஜனநாயகத்தை பலப்படுத்துவதன் மூலமாகவே சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்பதையும் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நாடளாவிய ரீதியில் எரிவாயு தட்டுப்பாடு

### கடன் வழங்குமாறு லிட்ரோ அறிவுறுத்தல்




நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கும் நிலையில், சிறு விற்பனையாளர்களுக்கு கடன் அடிப்படையில் சிலிண்டர்களை வழங்குமாறு லிட்ரோ நிறுவனம் விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. எரிவாயு விற்பனையாளர்களிடம் போதிய அளவான சிலிண்டர்கள் கைவசம் இல்லை என்று தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

ஓமான் ஆட்கடத்தல்

## முகவர்கள் இருவருக்கு விளக்கமறியல்

### கைது எண்ணிக்கை 5ஆக உயர்வு

ஓமான் ஆட்கடத்தல் கும்பலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு முகவர்களையும் டிசெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (22) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2

## கெஹலிய உள்ளிட்ட மூவருக்கு பயணத்தடை

### அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டு பிணை

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினர் என்று குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (22) அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

தொடர்ச்சி P2

## பெப். 4 இல் இலவசம்



கட்டண அறவீடுகளின்றி தேசிய பூங்காக்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் என்பவற்றை 75 ஆவது சுதந்திர தினத்தன்று பார்வையிடுவதற்கும் திரைப்படங்களை பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## 78,700 போதை வில்லைகள் சிக்கின

முகத்துவாரம், களுபோவில ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது ஒரு தொகை போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு வடக்கு குற்றவிசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் 78,700 போதை வில்லைகளுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இந்தப் போதைப்பொருள் தொகையை சட்டவிரோதமான முறையில் வான் மற்றும் கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 600 குழாய் வழக்கில் கெஹலியவுக்கு பிணை



குழாய் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று (22) பிணை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் செயற்பாட்டு பணிப்பாளர் சந்திரபால லியனகே மற்றும் முன்னாள் தலைவர் விமல் ரூபசிங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் குற்றப்பத்திரிகை நேற்று (22) தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## பாடசாலை கட்டமைப்பில் மாற்றங்களுக்கு இடமளியோம்

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

ஆசிரியர்களின் ஆடை தொடர்பில் எவ்வித மாற்றமும் முன்னெடுக்கப்படாது என விடயதானத்துக்குப் பொறுப்பான கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பகிரங்கமாக அறிவித்துள்ளதாகத் தெரிவித்த பதில் ஊடகத்துறை அமைச்சர் சாந்த பண்டார, பாடசாலை கட்டமைப்பு என்பது எமது நாட்டின் எதிர்காலம் என்றார்.

தொடர்ச்சி P2

## நச்சு போதைப்பொருட்கள் ஏற்றுமதி மையமாக நாடு மாறி வருகிறது

■ மஹேஸ்வரி விஜயனந்தன்



இலங்கை தற்போது ஆபத்தான போதைப்பொருட்கள் மற்றும் நச்சு மருந்துகளை மீள் ஏற்றுமதி செய்யும் மையமாக மாறி வருவதாகத் தெரிவித்த நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அதிகளவான பாடசாலை மாணவர்கள் இந்தப் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளதாகவும், இதன் அபாயகரமான தன்மைக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சந்திரிகா, நிமலின் உறுப்புரிமை பறிப்பு

### அமரவீரவின் பதவிக்கு சுமதிபால நியமனம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கட்சியின் முன்னாள் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உட்பட சிலரின் கட்சி உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு கட்சியின் மத்திய செயற்குழு ஏகமனதாக தீர்மானித்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில், மத்திய செயற்குழு நேற்று முன்தினம் (23) கூடியது.

தொடர்ச்சி P2

சட்டவிரோதமாக ஓமான், டுபாய்க்கு சென்றுள்ள

## 154 பெண்களையும் அழைத்துவர ஏற்பாடு

### அதிகாரி இடைநிறுத்தம்



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியில்லாமல் ஓமானுக்கு சென்ற 77 பெண்களும், டுபாய்க்கு சென்ற 77 பெண்களும் தற்போது பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான செலவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்பேற்கவுள்ளதாகவும், இவர்களை அழைத்துவருவதற்கு ஒருவருக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மீனவர்களின் மண்ணெண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய

## தினமும் 50 எரிபொருள் பவுசர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானம்

மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் முறையாகவும் தொடர்ச்சியாகவும் விநியோகிப்பதை உறுதிசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது குறித்து ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் (சமூக அலுவல்கள்) கீர்த்தி தென்னகோன், 22 நவம்பர் 2022 திகதியிடப்பட்ட விசேட அறிவித்தல் கடிதத்தை மாவட்ட செயலாளர்கள், மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளர்கள், மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பியுள்ளார். இதன்படி, மீனவர்களின் மண்ணெண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தினமும் 50 எரிபொருள் பவுசர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வதேச சக்திகள் சதி

சவால்களை பொறுப்பேற்குமாறு அழைத்தபோது அதனை ஏற்க மறுத்தவர்கள் விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கிறார்கள். வீரவசனம் பேசுபவர்களால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. நாங்கள், அப்படி வீர வசனங்கள் பேசுபவர்கள் அல்ல. சவால்களை பொறுப்பேற்பது எமது கொள்கையாகும். சவால்களை கண்டு ஒருபோதும் நாங்கள் அஞ்சி ஓடவில்லை என்றார்.

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதை தடுக்கும் தேசிய மற்றும் சர்வதேச சக்திகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. மீண்டும் எம்மை எவ்வாறு வீழ்த்துவது என்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளார்கள் என்றார்.

இந்த நேரத்தில் அரசியல் நோக்கத்திற்காக முரண்பட்டுக் கொள்ளாமல் அரசாங்கம் மாறும் போது மாற்றமடையாத அரச கொள்கையை செயற்படுத்துவது அவசியமாகும் என வலியுறுத்திய அவர், நாட்டில் சர்வதேசத்தின் தலையீடு தீவிரமடைந்துள்ளது. அவர்களின் நோக்கமே கடந்த மாதங்களில் செயற்படுத்தப்பட்டன. திட்டமிட்ட வகையில் பொருளாதாரம் வீழ்த்தப்பட்டது என்றார்.

நாட்டில் கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலைக்கும்,தற்போதைய நிலைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் பொருளாதார பாதிப்பில் இருந்து மீளும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்த அவர், இதன்மூலம் அனைவரின் எதிர்காலம் சிறக்கட்டும் ஆகவே, வரவு-செலவுத் திட்டத்துக்கு அனைவரும் திருத்தங்களுடன் ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

# ஜனநாயகத்தை பலப்படுத்தியே சவால்களை வெற்றிகொள்ள முடியும்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவரை சந்தித்துள்ள முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய, நாட்டின் நிகழ்கால நிலவரங்கள், அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

நாட்டின் உண்மை நிலவரங்கள் என்ன என்பதை மக்கள் உணராத வரையில் நாட்டின் பாதையை மாற்றியமைக்க முடியாது, அது சிரமமாக அமையும். எனவே அரசாங்கம் வெளிப்படைத்த ன்மையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகவும்.

அதேபோல் சுயாதீன ஆணைக்குழுக்களை பலப்படுத்தி, ஊழல் எதிர்ப்பு, குற்றங்கள் அற்ற நல்லாட்சியை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம், அதனை மூவின மக்களுடன் ஒன்றிணைந்தே முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# நாடளாவிய ரீதியில் எரிவாயு தட்டுப்பாடு

பெரும்பாலான விநியோகஸ்தர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விற்பனையாளர்களுக்கு கடனுக்கு வழங்குவதில்லை என்றும் பணம் கொடுத்தால் மாத்திரமே சிலிண்டர்களை வழங்குவதாகவும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறு விற்பனையாளர்கள் பலர் எரிவாயுவை கொள்வனவு செய்வதில் சிரமப்படும் காரணத்தினால் அவர்களுக்கு கடன் வசதியில் எரிவாயுவை வழங்குமாறு விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ தெரிவித்துள்ளது.

இதன் மூலம் எரிவாயு பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# பெப். 4 இல் இலவசம்

75 ஆவது சுதந்திர தினமான 2023 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி தேசிய பூங்காக்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள்/ இடங்களை இலவசமாகப் பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள திரையரங்குகளில் நுழைவுச்சீட்டுக் கட்டணத்தின் 50 சதவீதக் கழிவுடன் அன்றைய தினம் திரைப்படங்களைப் பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த யோசனையை அமைச்சரவைக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# 600 குழாய்...

2015 ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 990,000 ரூபாய் பணத்தை செலவிட்டு, 600 GI குழாய்களை கொள்வனவு செய்து அவற்றை வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்ட ப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் மூவரும் தலா 20,000 ரூபாய் பெறுமதியான ரொக்கப்பிணை மற்றும் தலா 05 இலட்சம் ரூபா ய்பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பிரதிவாதிகளின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளின் கைவிரல் அடையாளத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

# பாடசாலை...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு ஒசரி அல்லது சேலையை அணிந்து வருவது தான் சட்டரீதியான மற்றும் கலாசார ரீதியான பண்பாகும்.இது இன்று, நேற்று கொண்டுவரப்பட்டது ஒன்றல்ல.

இதில் சில குளறுபடிகள், மாற்றங்களை முன்னெடுக்க சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் தேவையாக உள்ளது. எனவே, அவர்களின் தேவைக்கேற்ப பாடசாலை கட்டமைப்பில் மாற்றத்தை முன்னெடுக்க அரசாங்கம் எவ்வகையிலும் இடமளிக்கப்படாது என்றார்.

இது தொடரபில் எதிர்காலத்தில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அவர்களின் தேவைக்கு பாடசாலை கட்டமைப்பு, கலாசாரம், தர்மத்தை மாற்ற முடியாது என்பதால், இந்த விடயத்தில் கல்வி அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

நமது நாட்டின் அடையாளம், நமது கலாசார அடையாளம் பாதுகாக்கப்படும் வகையில் அந்த ஆடைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. அதற்கு அப்பால் எடுத்துக்கொண்டால், இந்த ஆடைகளின் தரநிலைகள் ஆசிரியரின் மீதான மாணவர்களின் மரியாதை மற்றும் பக்தியைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, நமது நாட்டின் கலாச்சாரத்தை அழிக்க பல்வேறு சக்திகள் செயல்பட்டு வருகின்றன. பள்ளிகளுக்குச் சென்று இலவசமாக ஐஸ் போன்ற போதைப் பொருட்களை விநியோகம் செய்யும் குழுக்கள்தான் இத்தகைய செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றன என இதன்போது அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 154 பெண்களையும்...

பாராளுமன்றம் நேற்று (22) பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

சுற்றுலா வீசாவில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும், ஓமானுக்கும் சென்று தொழிலை தேடுதல் செயற்பாடுகளில் நிர்க்கதியாகியுள்ள பெண்கள் தொடர்பில், அறிக்கை ஒன்று சமர்ப்பித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கான அனுமதி அமைச்சரவையின் ஊடாக பெறப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களை அழைத்து வருவதற்கு முன்னர், குற்றப்புலனாய்வுத்துறையினரை அங்கு அனுப்பி அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து, குற்றம் புரிந்தோரை கண்டுபிடிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

இந்தநிலையில் சுற்றுலா வீசாவில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்று அங்கிருந்து எல்லையின் ஊடாக ஓமானுக்கு பெண்களை அழைத்துச்சென்ற குற்றச்சாட்டின் பேரில் ஏற்கெனவே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, பெண்களை ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து ஓமானுக்கு சட்ட விரோதமான வகையில், அனுப்பும் செயற்பாடு தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள, அபுதாபியின் இலங்கை தூதரகத்தில் பணியாற்றும் குஷான் என்ற அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# நச்சு போதைப்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கு தனியான மேல் நீதிமன்றத்தை நியமிக்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அவ்வாறான நீதிமன்றத்தை அடுத்த வருடம் ஜனவரிக்குள் நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அபாயகரமான போதைப்பொருள் மற்றும் நச்சு போதைப்பொருள் பரவலை தடுக்கும் வகையில் ஜனாதிபதி செயலணியொன்றை அமைப்பதற்கு நீதியமைச்சர் என்ற ரீதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக தெரிவித்த அமைச்சர், போதைப்பொருள் பிரச்சினை என்பது தற்போது பொருளாதாரப் பிரச்சினையை முறியடித்துள்ள பிரச்சினை எனவும், பல்வேறு காலங்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றி மீண்டும் தீர்வு காணப்படுகின்ற போதிலும், போதைப்பொருள் பிரச்சினையானது ஒட்டுமொத்த சந்ததியினரின் அழிவையே ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களில் கிட்டத்தட்ட 500,000 இளைஞர்கள் தற்போது இந்த போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அதிகளவான பாடசாலை மாணவர்கள் இந்த போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும், இதன் அபாயகரமான தன்மைக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்த போதைக்கு அடிமையாக ஒரு நாள் போதும், போதைக்கு அடிமையானால் 02 வருடங்கள் மட்டுமே ஆயுட்காலம், இந்த மருந்தினால் மூளை செல்கள் அழிந்துவிடும் என நிபுணர்கள் தெளிவாக கூறுகிறார்கள் என்றார்.

சில ஊழல் அதிகாரிகளின் செயற்பாடுகளினால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் நீதிமன்ற சாட்சிப் பொருளாக வைக்கப்படும் நிலையில், சில நட்களில் அவை ஏதோ ஒரு வகையில் சமூகத்துக்கு வந்து சேர்வதாகவும் தெரிவித்தார்.

# தினமும் 50 எரிபொருள் பவுசர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானம்

மீனவர்களின் தேவைக்காக 357 மண்ணெண்ணெய் பவுசர்களை விடுவிக்க கடந்த வாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் 206 பவுசர்களே (58%) பெட்ரோல் நிலையங்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதற்காக அரசாங்கம் 33 இலட்சம் டொலர்கள் மேலதிக செலவீனங்களைச் செய்த போதிலும் மீனவ மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் முறையாக மேற்கொள்ளப்படாததால் மீனவர்கள், மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகக் கருதப்படுவதுடன், இதன் மூலம் மக்களின் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளின் அளவு மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பகுதிகளை தீர்மானிக்கும் பொறுப்பு, கடற்றொழில் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கடற்றொழில் அமைச்சுகள் மற்றும் மாகாண கூட்டுறவு அமைச்சுக்களின் செயலாளர்கள், கடற்றொழில் திணைக்களம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணையை வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

# சந்தேக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு கூடியது. இதன்போது வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொண்டோம். பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்தோம். நாட்டின் நலனுக்கு முரணான விடயங்களை கண்டுள்ளோம். பாதுகாப்பு துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. பல்வேறு வகையான அடிப்படை சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் பாதுகாப்புக்கான நிதி 12 வீதத்தால் அதிகரித்துள்ளன. இது அவசியமான விடயம் அல்ல. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை விடுவிக்கும் சாதகமான விடயங்களை மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அது நடக்கவில்லை. இதனால் நாங்கள் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றோம்.

இதேவேவளை ஜனாதிபதி அண்மை காலமாக தொடர்ச்சியாக ஒரு விடயத்தை குறிப்பிடுகின்றார். நீண்ட காலமாக நாட்டில் நிலவும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக தெரிவித்துள்ளார். அதனை நாங்கள் சந்தேக கண்ணோடே பார்க்கின்றோம். அவரை ஒருகட்டத்தில் நம்பினோம். இந்த பிரச்சினையில் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டாலும் அதனை செய்யவில்லை என்றார்.

# முகவர்கள்...

கொழும்பில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரிடம் சரணடைந்த பதுளையைச் சேர்ந்த ஒருவரும் குருநாகலில் கைது செய்யப்பட்ட ஒருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தார்.

இதேவேளை, திங்கட்கிழமை (21) காலை சீ.ஐ.டியில் சரணடைந்த ஆட்கடத்தலுடன் தொடர்புடைய பெண், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஆஷா திஸாநாயக்க என்ற குறித்த பெண்ணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட் கடத்தல், கடத்தல் மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல வாரங்களாக தேடி வந்தனர்.

ஓமான் ஆட்கடத்தல் கும்பலுடன் தொடர்புடைய ஆஷாவிடம் நான்கு பதிவு செய்யப்பட்ட முகவரிகள் இருப்பதாகவும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் அவர் கைதுசெய்யப்படவில்லை என்றும் சீ.ஐ.டி அறிவித்திருந்த நிலையில் அவர் சரணடைந்திருந்தார்.

ஆட்கடத்தல் கும்பலுடன் தொடர்பு உள்ளவர்கள் என்ற சந்தேகத்தில் மொத்தம் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டுபாயில் இருந்து இலங்கை திரும்பிய 40 வயதுடைய நபர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டிருந்தார்.

வத்தளையைச் சேர்ந்த குறித்த நபர், மருதானையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தாக தெரியவந்தது. இலங்கைப் பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் தரகரான ஆட்கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் ஞாயிற்றுக்கிழமை (20) கைது செய்யப்பட்டார்.

# கெஹலிய...

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டதுடன், பிரதிவாதிகள் மூவருக்கும் வெளிநாட்டு பயணத்தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். பிரதிவாதிகள் மூவரையும் தலா 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளிலும் விடுவித்த நீதிபதி, கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதுடன், சாட்சிய விசாரணைக்கான தினமான பெப்ரவரி 1ஆம் திகதியை குறித்தார். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிதியைப் பயன்படுத்தி 600 ஜி.ஐ குழாய்களைக் கொள்வனவு செய்து, அரசுக்கு 990,000 ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியதாக மூவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் விமல் ரூபசிங்க, அதன் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே ஆகியோரும் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இலஞ்சச் சட்டத்தின் 70ஆவது பிரிவின் கீழ் அதிகுற்றப் பத்திரம் தாக்கல் செய்துள்ள ஆணைக்குழு, 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில் ஜி.ஐ குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

# சந்திரிக்கா...

அதன்போது, கட்சியின் கருத்துக்கும் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கும் எதிராக செயற்பட்ட முன்னாள் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர, முன்னாள் பிரதிச் செயலாளர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, முன்னாள் பிரசாரச் செயலாளர் சாந்த பண்டார, முன்னாள் பொருளாளர் லசந்த அழகியவன்ன, உப தலைவர்களான சுரேன் ராகவன், சாமர சம்பத் தசநாயக்க, ஜகத் புஷ்பகுமார ஆகியோரின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டது.

ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்றும் அதுவரை அவர்களின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்படும் என்றும் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

எம்.பிக்களான ஷான் விஜயலால் சில்வா, அங்கஜன் ராமநாதன் மற்றும் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தயாசிறி எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை நீக்கி, அந்தப் பதவிக்கு கட்சியின் பிரதித் தலைவர் திலங்க சுமதிபாலவை நியமிப்பதற்கும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்அடிப்படையில், திலங்க சுமதிபாலவுக்கான நியமனக்கடிதத்தை கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கி வைத்ததார். அத்துடன், 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நேற்றைய (22) வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்கவும் சுதந்திரக் கட்சி தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழனாக எனக்கு

# இந்த வரவு செலவுத் திட்டம் வருத்தத்தை தருகின்றது



இலங்கையனாக இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கின்றேன். ஆனால் மலையக தமிழனாக இந்த வரவு செலவுத் திட்டம் எனக்கு வருத்தத்தை தருகின்றது. ஏனெனில் எங்களுக்கு எந்த நிவாரணமோ பாதுகாப்போ இதில் இல்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் ஜீவன் தொண்டமான் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் எதிர்பார்த்த பொருளாதார சீர் திருத்தங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் ஒரு இலங்கையன் என்ற வகையில் வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கின்றோம். அதேநேரம் மலையக தமிழனாக இந்த வரவு செலவுத் திட்டம் எனக்கு வருத்தத்தை தருகின்றது. ஏனெனில் எங்களுக்கு எந்த நிவாரணமோ பாதுகாப்போ இதில் இல்லை. இது தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்து எமது வருத்தத்தை தெரிவித்திருந்தோம். அடுத்துவரும் 6,7 மாதங்களில் பொருளாதார மறுசீரமைப்பு மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு இருக்கின்றது. ஆனால் அந்த 6,7 மாதங்களில் எமது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எமக்கு பயம் இருக்கின்றது. எந்த பாதுகாப்பு கவசமும் இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது கடினமாகும்.

ஏனெனில் கொவிட் காலத்தில் தோட்ட துரைமாருக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தோட்ட மக்களுக்கு தடுப்பூசி ஏற்றவிலலை. இவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் எமது மக்கள் புறக்கணிக்கப்பட்டு சென்றால் நாங்கள் இலங்கையர்களா என்ற சந்தேகம் நாளைக்கு எங்களுக்கே ஏற்படும்.

அத்துடன் ஊவா மாகாணத்தில் அகரபத்தனை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். ஒரு கிரேம் தேயிலை கூட வெளியில் செல்லாமல் நிறுத்தி இருக்கின்றோம். எனவே அகரபத்தனை பெருந்தோட்ட நிறுவனம் இதற்கு சரியான தீர்வை வழங்காவிட்டால் இந்த போராட்டத்தை நுவரெலியா மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அதனால் எமது போராட்டத்துக்கு அனைத்து தொழிற்சங்களும் ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.



அடுத்த வருடத்துக்கான கடன்

# 3 இலட்சம் கோடி ரூபாவினால் அதிகரிக்கும்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் உடனடியாக தேர்தலை நடத்தி மக்களுக்கு நம்பிக்கையான அரசாங்கத்தை அமைக்க இடமளிக்க வேண்டும் என்று ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை பார்க்கும் போது பழைய தலையணையை அதே உறையுடன் அதே நிலைமையுடன் ஜனாதிபதி பயன்படுத்தவதை போன்றே இருக்கின்றது. வரவு செலவுத் திட்டத்தில் செலவுக்கான பணத்தை பெற்றுக்கொள்வதற்கான முறைமையை குறிப்பிடவோ, நாட்டுக்கு தேவையான டொலரை பெற்றுக்கொள்ளவும் முடியாது போயுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் உண்மையானவையும் அல்ல. அவை யதார்த்தமான புள்ளி விபரங்களே அல்ல. அடுத்த வருடத்தில் 3 இலட்சம் கோடி ரூபாவினால் எங்களின் கடன் அதிகரிக்கப் போகின்றது. இதுவே வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அரச வருமானத்தில் 130 வீதத்தை கடன் வட்டி மற்றும் தவணைக்காக செலுத்தும் நிலைமையே காணப்படுகின்றது. கடன்கள் அதிகரித்த பின்னர் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி கடன் செலுத்துவதை நிறுத்தியுள்ளோம். அதன்படி வரலாற்றில் கடனை மீளச் செலுத்த முடியாத நாடாக இலங்கை மாறியுள்ளது. நெருக்கடி மேலும் அதிகரித்து அடுத்த வருடத்தில் மேலும் கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக தேர்தலை நடத்தி மக்கள் நம்பிக்கை கொள்ளும் ஆட்சியை அமைக்க இடமளிக்க வேண்டும். அதற்காக ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அந்த ஒரு வருட காலத்திலேயே இதில் இருந்து மீண்டு வர முடியும். இந்நிலையில் நெருக்கடிக்கு காரணமான, இதனை தீர்க்க முடியாத மற்றும் மக்கள் ஆணைக்கு எதிரான குழுக்களினால் தீர்வு காண முடியாது. இதேவேளை நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்யப்படும் அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும் அனைத்து இனங்களிடையேயும் முறுகளை ஏற்படுத்தாத, மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்பு அவசியமாகும் என்றார்.

# இந்த நிலைமைக்கு கூட்டமைப்பும் காரணம்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் காரணம் என குற்றஞ்சாட்டிய முன்னாள் அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான மஹிந்தானந்த அளுத்கமகே, கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டங்களில் கடன் பெற்று நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கியதாலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்துக் கொண்டிப்பதை விடுத்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்படுகிறது. கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டங்களில் கடன் பெற்று நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கியதால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும். பொருளாதார பாதிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்பு இல்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் குறிப்பிட முடியாது, ஏனெனில் இவர்கள் அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை வகிக்காவிட்டாலும், அரசாங்கங்களின் பங்குதாரர்களாக இருந்துள்ளார்கள்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் எதிர் தரப்பினர் தேர்தலை நடத்துமாறு கோருகிறார்கள். தேர்தலை நடத்தி புதிய அரசாங்கம் வந்தவுடன் நாட்டில் டொலர் பற்றாக்குறைக்கு தீர்வு காண முடியுமா? தேர்தலை நடத்திய பின்னர் நாட்டுக்கு தடையின்றி டொலர் வருமாக இருந்தால் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்த முழு ஒத்துழைப்பு வழங்க நாம் தயார் என்றார்.

நாடு வங்குரோத்தடைய

# ஜே.வி.பியும் ராஜபக்ஷர்களுமே காரணம்

நாடு வங்குரோத்தடைய ராஜபக்ஷர்களும் அவர்களின் சகாக்களுமே காரணம். அதேபோல் 2004ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் ஜே.வி.பியும் ராஜபக்ஷவும் இணைந்து மக்களை ஏமாற்றியதன் விளைவாகவே நாடு வீழ்ச்சி கண்டது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசிம் தெரிவித்தார்.

அடுத்த வருட அரச வருமானத்தை நூற்றுக்கு 69 வீதமாக அதிகரித்துள்ளது. இதன் சுமையும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. நாடு அந்த அளவுக்கு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைவதற்கான காரணத்தை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து அறிக்கையிட்டுள்ள பொருளாதார நிபுணர்களின் கூற்றின் பிரகாரம் 2004க்கு பின்னரே இந்த பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர். அதன் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபயராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, பி,பி, ஜயசுந்தர, நிவாட் கப்ரால் ஆகியோரே பொருளாதார கொலையாளிகள் என்றே எமக்கு கூறவேண்டி ஏற்படுகின்றது.

அதேபோன்று கடன் வட்டி செலுத்துவதற்கு அரச வருமானத்தில் நூற்றுக்கு 72வீதம் செலுத்தவேண்டி இருந்தது என்றார்.

தேசிய இனப் பிரச்சினையை

# வடக்கு பிரச்சினையாக மட்டும் பார்க்காதீர்கள்



தேசிய இனப் பிரச்சினையை வடக்கு பிரச்சினையாக மாத்திரம் பார்க்காது வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினையாக பார்த்து தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. மிகவும் பின் தங்கியவர்களாக கருதப்படும் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் எவ்வித அவதானத்தையும் எடுத்துக் காட்டுவதற்கு நிதி அமைச்சர் தவிறிவிட்டார். வறுமை நிலைமை பெருந்தோட்டத் துறையில் அதிகரித்துள்ளது. இந்நிலையில் நாட்டின் தலைவர் மற்றும் நிதி அமைச்சர் என்ற வகையில் தான் பிரச்சினைகளை அறிந்திருக்கின்றேன் என்ற நம்பிக்கையையாவது ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவருக்கு இந்த விடயங்கள் தொடர்பில் நேரடியாகவும் கூறியுள்ளேன்.

இதேவேளை ஜனாதிபதி உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் எல்லை நிர்ணய குழுவொன்றை அமைத்துள்ளார். அவர் கடந்த அரசாங்கத்தில் பிரதமராக இருந்த போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தார். ஆனால் இப்போது அவர் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று கூறுகின்றார். 8000 பேர் 4000 ஆக குறைந்தால் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவடையும் நிலைமையே உள்ளது.

அத்துடன் தேசிய இணைப் பிரச்சியை தொடர்பில் ஜனாதிபதிக்கும் மக்கள் ஆணை உள்ளது. அதற்கு ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். தேசியப் பிரச்சினை வடக்கில் மாத்திரமன்றி கிழக்கிலும் உள்ளது. வடக்கில் முஸ்லிம்கள், தென்னிலங்கையில் மலையகத்தில் இந்திய வம்சாவளியினரும் வாழ்கின்றனர். அவர்கள் தொடர்பில் பேச வேண்டும். இதனால் தேசிய இனப் பிரச்சினையை வடக்கு பிரச்சினையாக கூற வேண்டாம். வடக்கு, கிழக்கு, தமிழ், முஸ்லிம், மலையக தமிழர்கள் தொடர்பில் பேசினாலே சிங்கள சகோதரர்களுடன் பிரிவுபடாத நாட்டில் எப்படி வாழ்வது என்று கதைக்கலாம். இது தொடர்பில் பேச்சுக்களை நடத்தி தீர்வு காண வேண்டும் என்றார்.

ஐ.எம்.எப்ஐ தவிர

# மாற்றுத்திட்டம் அரசாங்கத்திடம் இல்லை



கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதற்கான உண்மையான காரணத்தை தெரிந்து கொண்டால் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் எனத் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எதிரணி சுயாதீன எம்.பி.யுமான விமல் வீரவன்ச, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை தவிர்த்து மாற்றுத்திட்டம் அரசாங்கத்திடம் கிடையாது எனவும் கூறினார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வரி அதிகரிப்பை மாத்திரம் பிரதான இலக்காக கொண்டுள்ளது. பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அரச நிறுவனங்களை விற்று கிடைக்கும் வருமானத்தை கொண்டு வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்து மீண்டும் கடன் பெறுவதை ஜனாதிபதி பிரதான கொள்கையாக கொண்டுள்ளார். அரசமுறை கடன் தொடர்பில் கருத்துரைப்பவர்கள் நல்லாட்சி அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன் குறித்து பேசுவதில்லை. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த குறுகிய காலப்பகுதியில் 17.பில்லியன் டொலர் கடனை பெற்றுக் கொண்டது. நல்லாட்சி அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது.

பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்துள்ள நிலையிலும் அரசாங்கம் அந்நிய செலாவணி சட்டத்தை திருத்தம் செய்ய கவனம் செலுத்தவில்லை. தேசிய வருமானத்தை பலவீனப்படுத்தும் வகையில் உள்ள இந்த சட்டத்தை திருத்தம் செய்யுமாறு பலமுறை எடுத்துரைத்தும் இதுவரை கவனம் செலுத்தவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள அரசாங்கம் நாட்டை நாளாந்த சேவையாளரை போல் முகாமைத்துவம் செய்கிறது. கடன் மறுசீரமைப்புக்கு பிரதான நிலை கடன் வழங்குநர் நாடுகள் மறுப்பு தெரிவித்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெறும் முயற்சி முழுமையாக தோல்வியடையும். ஒருவேளை வெற்றிபெற்றால் 48 மாதங்களுக்கு 2.9 பில்லியன் டொலர் மாத்திரம் கிடைக்கப் பெறும் என்றார்.


# கம்பஹா மாநகர சபை

**நகராட்சி எல்லைக்குள் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை இறுதியாக அகற்றுவதற்காக 2023 ஆம் ஆண்டிற்கான விலைமனு கோரல் அழைக்கப்படுகின்றன**

1. கம்பஹா மகாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை கம்பஹா மகாநகர சபையின் குப்பைப் பரிமாற்ற நிலையத்திலிருந்து இறுதியாக அகற்றுவதற்கான விலைமனுகோரல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
2. சீல் வைக்கப்பட்ட விலைமனுகோரல் விண்ணப்பங்கள் 13.12.2022 ஆம் திகதி மு.ப 10.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் மு.ப 10.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுகோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும் போது பங்குபற்ற முடியும்.
3. விலைமனுகோரல் விண்ணப்பங்களை கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நகர சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். இதற்காக இறுதிக்கழிவுகளை அகற்றுவதில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இதற்கு விண்ணப்பிக்களாம். எதிர்பார்க்கப்படும் தொகை மற்றும் நிபந்தனைகள், தொலைபேசி இலக்கம் உட்பட அனைத்து விவரங்களும் விலைமனுகோரல் விண்ணபத்தில் குறிப்பிடப்படல் வேண்டும் மற்றும் கடிதவுரையின் இடது பக்க மேல் மூலையில் "நகராட்சிப் பகுதியில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை அகற்றுவதற்கான டெண்டருக்கு அழைப்புவிலைமனுகோரல் விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.
4. அதற்கான விலைமனுகோரல் விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை கம்பஹா மகாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் 12.12.2022 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாக வந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை ரூபா. 500/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 033-4942285 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**ஜே. ஏ. டீ. ஜீ. எஸ். ரணசிங்க,**
**நகர ஆணையாளர்,**
**கம்பஹா மாநகர சபை,**
**கம்பஹா.**
**21.11.2022**

# பாடசாலைக்குள் அத்துமீறி புகுந்த மாணவனின் தந்தை ஆசிரியர் மீது தாக்குதல்

## ஆசிரியர் யாழ்ப்பாண வைத்திசாலை விபத்துப் பிரிவில் அனுமதி

## நடவடிக்கை எடுக்கும் வரை ஆசிரியர்கள் வகுப்பறை புறக்கணிப்பு

எம். றொசாந்த், செந்துரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது, மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரான துரையப்பா கௌரிபாலன் எனும் ஆசிரியரே காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்து சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று (22) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

மலசல கூடத்துக்கு சென்ற மாணவன் ஒருவன் நீண்ட நேரமாக வகுப்பறை திரும்பாத காரணத்தால் உடற்கல்வி ஆசிரியர், மாணவனைத் தேடிச் சென்றுள்ளார். இதன் போது மாணவன் நீண்ட நேரமாக மலசலகூட கதவைப் பூட்டிவிட்டு உள்ளே இருந்துள்ளார்.

"நீண்ட நேரமாக உள்ளே என்ன செய்கின்றாய்" என ஆசிரியர் கண்டித்துள்ளார்.

இதன்போது குறித்த மாணவன், பாடசாலைக்கு வெளியில்சென்று தனது பெரியப்பாவுக்கு விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். பெரியப்பாவை அழைத்த ஆசிரியர், மாணவனின் நடத்தை தொடர்பில் தெளிவுபடுத்தி இருந்தார்.

இந்நிலையில், பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த குறித்த மாணவனின் தந்தை, ஆசிரியர் ஓய்வறைக்குள் இருந்த உடற்கல்வி ஆசிரியர் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளார். தலையில் இரத்தக் காயங்களுடன் சரிந்த ஆசிரியரை, சக ஆசிரியர்கள் அழைத்துச் சென்று, யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த மாணவன், இதற்கு முன்னரும் பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புபட்ட நிலையில், ஆசிரியர்களால் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளார். அச்சுவேலி, வல்லைப் பகுதியில், இறைச்சி வியாபாரியிடம் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. ஆகவே குறித்த மாணவன், ஆசிரியர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் கலாசாரம் அதிகரித்துள்ள நிலையில், உடற்கல்வி ஆசிரியர்கள் போதைப்பொருள் ஒழிப்பு, ஒழுக்காற்று குழுவின் தலைவர்களாகவும் செயற்படுகின்றனர்.

இந்த விடயத்தை அறிந்து செய்தி சேகரிப்பதற்குச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு, அந்தப் பாடசாலையின் முன்னால் குழுமி இருந்த பழைய மாணவர்கள் என கூறப்படும் சிலர் இடையூறுகளை விளைவித்ததுடன், ஒலிப்பதிவு கருவிகளைப் பறித்து அடாவடியில் ஈடுபட்டனர். அத்துடன் குறித்த செய்தி, வெளியில் வரக்கூடாது எனவும் கடும் தொனியில் மிரட்டினர். அத்துடன் எடுத்த புகைப்படங்களை அழிக்குமாறு அச்சுறுத்தல் விடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள், யாழ்ப்பாணம் தலைமை பீட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தொடர்பை ஏற்படுத்தி, விடயத்தைத் தெரியப்படுத்தியதை அடுத்து, ஊடகவியலாளர்களுக்கும் குறித்த குழுவினருக்கும் இடையிலான முரண்பாடு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் குறித்த பெற்றோர் கைது செய்யப்படும் வரை, பாடசாலை கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து ஆசிரியர்கள் புறக்கணிப்பு செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## உரிய சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க டொக்டர் ரி. வினோதன் வேண்டுகோள்

எஸ். றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துக் காணப்படும் நிலையில் காய்ச்சல், தலையிடி உள்ளடங்கலாக டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு சென்று, உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், மன்னார் நகரம், தோட்டவெளி, எருக்கலம்பிட்டி போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்த வருடம் தற்போது வரை, மன்னார் மாவட்டத்தில் 236 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் மரணங்கள் எதுவும் நிகழவில்லை. பல நோயாளர்கள் குருதி கசிவு நிலையுடன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்போது தீவிர சிகிச்சைக்கு உற்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே பொது மக்கள், தமது வீடுகள், சுற்றுச்சூழல் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து, அவற்றை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக, நீரை சேகரித்து வைக்கும் பாத்திரங்கள், தாங்கிகள், வீட்டினுள் அடிக்கடி சுத்தப்படுத்தப்படாத சிறிய பாத்திரங்கள், பூஞ்சாடிகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு முட்டையிட்டு பெருகுகின்றது. எனவே பொது மக்கள் இவ்விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# உதவி தேர்தல் ஆணையாளராக வி. சிவராஜா நியமனம்

மன்னார் நிருபர்



மன்னார் மாவட்டத்துக்கான உதவி தேர்தல் ஆணையாளராக வி. சிவராஜா நியமிக்கப்பட்டு உள்ளார். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரான்லி டிமெல் முன்னிலை நேற்று முன்தினம் (21) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட வி. சிவராஜா, கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட உதவி செயலாளராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்காலில் நினைவுகூர அழைப்பு



செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கார்த்திகை 27ஆம் திகதி சுடர் ஏற்றிவணக்கம் செலுத்த வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) முள்ளிவாய்க்கால் பிரதேச மக்களால் சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது. 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வு வெகு சிறப்பாக நினைவுகூரப்படவுள்ளது. அதற்கான தயார்படுத்தலில் பிரதேச மக்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதற்காக முள்ளிவாய்க்கால் பகுதியில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் என அனைவரும் வருகை தந்து, சுடரேற்றி மாவீரரை நினைவில் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# நல்லூரில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள்

நிதர்சன் வினோத்

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலாயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், மக்கள் அஞ்சலிக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது, 34 கல்வெட்டுகள் 17 மாவீரர்களின் பெற்றோரால் ஈகைச் சுடரேற்றப்பட்டு, ஒரே நேரத்தில் நேற்று முன்தினம் (21) மாலை 6.30 மணியளவில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. இவை நவம்பர் 27ஆம் திகதி வரையில் அங்கு அஞ்சலிக்காக



வைக்கப்பட்டிருக்கும்.

தியாக தீபம் திலீபனின் நினைவாலாயத்துக்கு முன்பாக உள்ள பகுதிகளில், யாழ் மாநகர சபையின் அனுமதி பெற்று குறித்த கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

உணவு பொருட்களை

# தேவையானவர்கள் எடுத்து செல்லுங்கள்; இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள்

எம்.எம்.எம் அஹமட் அனாம்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில், 'உணவு பொருட்கள் தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள்; இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள்' என்ற திட்டத்தில் ரெசிலியன்ஸ் அமைப்பினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

'தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள்; இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள்' என்ற திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உணவுகள் வைப்பதற்கான பெட்டிகள், உணவுகளுடன் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியலயம், செம்மண்ஓடை அல் ஹம்ரா வித்தியாலயம், ஓட்டமாவடி பஸ் தரிப்பு நிலையம் என்பற்றில் உணவுகள் வைக்கப்பட்ட பெட்டிகள் வைக்கப்பட்டன.

இதில் பாடசாலைகளில் வைக்கப்பட்ட பெட்டிகளில் பிஸ்கட், பால் பக்கெட்டுகள் வைக்கப்பட்டதுடன் பொதுஇடங்களில் வைக்கப்பட்ட பெட்டிகளில் பிஸ்கெட்டுகள், பருப்பு, கோதுமை மா, சம போச போன்ற பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்கள் தேவையான எவரும் தங்களது தேவைக்கு ஏற்ப எடுத்துக் கொள்வதுடன், வசதி படைத்தவர்கள் தங்களாலான பொருட்களை இதில் வைத்துச் செல்லாம் என்று இத்திட்டத்தின் இணைப்பாளர் எம்.எச்.எம் அம்ராஸ் அலி தெரிவித்தார்.

இத்திட்டம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தவதற்கு ரெசிலியன்ஸ் அமைப்பின் பணிப்பாளர் டொக்டர் நெவில் விஜயசேகரவின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக இத்திட்டத்தின் இணைப்பாளர் எம்.எச்.எம் அம்ராஸ் அலி தெரிவித்தார்.

# பல்சமய ஒன்றியத்தால் மதஸ்தலங்களில் மரநடுகை



எம். எஸ். எம் நூர்தீன்

பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மதத்தலங்களுக்கு இடையே அந்நியோன்னியத்தை ஏற்படுத்தும்முகமாக, மதத்தலைவர்களுக்கு இடையிலான ஒன்றுகூடல்கள் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு, ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்தானத்தில் விசேட கலந்துரையாடலும் கனிமரங்கள் நடும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது.

மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி அழகுதுரை யேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பல்சமய ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே சிவபாலன் குருக்கள், பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் அடிகளார், பிள்ளையாரடி விஸ்வரூப ஆஞ்சனேயர் ஆலய பிரதம குரு உத்தம ஜெயதீஸ்வர குருக்கள், ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்தான நிலையத்தின் விகாராதிபதி உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளதுடன், குறித்த நிகழ்வை கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் சமாதான செயற்றிட்ட இணைப்பாளர் இக்னேசியஸ் கிறிஸ்டி இணைப்பாக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கிழக்கு மாகாண இளம் கலைஞர் விருது விழாவில்

# பொறியியலாளர் குமணனுக்கு இரண்டு விருதுகள்

ஏ.எச்.ஏ ஹூஸைன்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கலை, இலக்கிய துறைக்காக தொடர்ந்தும் சேவையாற்றி வரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் 2020/ 2021 ஆம் ஆண்டுக்கான நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றது.

இதன் போது, பொறியியலாளர் அமரசிங்கம் குமணன், 'நாட்டார் கலை இளங்கலைஞர்' எனும் விருதையும், இவர் எழுதிய 'வரலாற்றுத்துறை சார் இலக்கியத்தில் - மறக்கப்பட்ட தமிழர் சிலம்பக் கலையும் அதன் வரலாற்றும் பின்னணியும்' எனும் சிறந்த நூலுக்கான விருதையும் பெற்றுக்கொண்டார்.

இவர், சர்வதேச சிலம்ப சம்மேளனத்தால் நடத்தப்பட்டு வரும் சிலம்ப போட்டியில் 2021 மற்றும் 2022 இற்கான போட்டிகளில் ஆயுத வரிசை, வெறும் கை வரிசை பிரிவுகளில் இரண்டு வருடங்களிலும் தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளதுடன், சர்வதேச சிலம்ப சம்மேளனத்தின் இலங்கை தலைவராகவும் இவர் பதவிவகித்து வருகின்றார்.

இவர், சிவில் பொறியியல், வணிக நிர்வாக முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், சிலம்பம், தெற்கன் களரி, வர்மக்கலை, யோகக்கலை, விஷ வைத்தியம் ஆகியவற்றை முறையாக கற்றுக்கொண்டுள்ளதுடன் இவ்வாறான பாரம்பரிய பொக்கிஷங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு, அவை தொடர்பாக நூல்களையும் எழுதியுள்ளார்.

# கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாக சபை



ஏ.எச்.ஏ ஹூஸைன்


கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபை தெரிவும் ஞாயிற்றுக்கிழமை (20) மட்டக்களப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எ. பிரியகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக தெரிவின் போது, சங்கத்தின் தலைவராக மீண்டும் எ. பிரியகாந்தன் தெரிவு செய்யப்பட்டதுடன். செயலாளராக டி.ஜி.பி நிரஞ்சனும் உப தலைவராக வா.ச ஜெகநாதனும் உதவி செயலாளராக பி. பிரமிதனும் பொருளாளராக க. சண்முகநாதனும் நிர்வாக செயலாளராக இ. நாகலிங்கமும் பிரசார செயலாளராக அ. ரமணனும் உதவி பொருளாளராக ம. மகேந்திரராசா உட்பட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருகோணமலை சிறைச்சாலையின்

# புதிய பிரதம ஜெயிலராக ஆர். மோகனராஜா நியமனம்

எப். முபாரக்



திருகோணமலை சிறைச்சாலையின் புதிய பிரதம ஜெயிலராக ஆர். மோகனராஜா கடமைகளை நேற்று முன்தினம் (21) உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

இதற்கு முன்னர், மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பிரதம ஜெயிலராக கடமையாற்றியதுடன் பொலன்னறுவை சிறைச்சாலையிலும் பிரதம ஜெயிலராக கடமையாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஓமானில் சிக்கியுள்ள இலங்கை பெண்கள் தொடர்பில்

## இ.தொ.காவும் அவதானம் செலுத்தியுள்ளது

எஸ்.கணேசன், ஆ.ரமேஸ்

இலங்கையிலிருந்து ஓமான் நாட்டுக்கு பணிப்பெண்களாக கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிக்கி தவிக்கும் மலையகம் உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பணிப் பெண்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்துரையாடியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இலங்கையிலிருந்து சுற்றுலா விசா மூலம் பணிப்பெண்களாக ஓமான் நாட்டுக்கு சென்று, அங்கு தமது நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் தங்கியிருக்கும் மலையகம் உட்பட்ட ஏனைய பிரதேசங்களில் உள்ள பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என இ.தொ.கா கலந்துரையாடியுள்ளது.

இதேவேளை இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றதாக கலந்துரையாடலில் தெரிவித்துள்ளதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் இணைந்து ஓமானில் சிக்கியுள்ள மலையகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பணிப் பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இ.தொ.கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நுவரெலியாவில் பஸ்கள் நிறுத்துவது தொடர்பில்

# இருதரப்பினரும் ஏட்டிக்குப்போட்டி



## பஸ்கள் ஓடுவதிலும் பாதிப்பு

சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பணியாளர்கள் கடமைகளிலிருந்து விலகியுள்ளதால் பயணிகள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், ஏனைய பிரதேச இ.போ.ச பஸ்களும் நுவரெலியாவுக்குச் செல்வது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா இ.போ.ச பணியாளர்கள் நேற்று முன்தினம் (21) மாலையிலிருந்து தமது கடமைகளிலிருந்து விலகியுள்ளனர்.

மத்திய மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் நுவரெலியா பஸ் தரிப்பிடத்துக்குள் தூர இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்களை நிறுத்துவதை நுவரெலியா பஸ் தரிப்பிட நேர கணிப்பாளரும் தனியார் பஸ் உரிமையாளர்களும் இடமளிக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இ.போ.ச பணியாளர்கள் தமது கடமைகளிலிருந்து விலகியுள்ளனர்.

கதிர்காமம், கம்பளை, பண்டாரவளை, ஹொரனை, களுத்துறை, கண்டி, தென் பிரதேசங்களுக்கான பெருமளவான இ.போ.ச பஸ்கள் நுவரெலியா நகர் ஊடாக பயணிப்பதுடன், குறித்த பஸ்கள் மற்றும் வெலிமட, கொழும்பு, கதிர்காமம், பதுளை ஊடாக கண்டிக்குச் செல்லும் பஸ்களையும் நுவரெலியா



பொது பஸ் தரிப்பிடத்துக்குள் நுழைவதற்கு நேர குறிப்பாளரும் தனியார் பஸ் உரிமையாளர்களும் இடம் வழங்காமை காரணமாக, பஸ் தரிப்பிடத்திலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில் பஸ்களை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவரிடம் வினவியபோது, நுவரெலியா பஸ் தரிப்பிடத்திலிருந்து ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் தூர மற்றும் குறுகிய தூர சேவையில் ஈடுபடுகின்றன.

இவ்வாறான நிலையில், வேறு பஸ் டிப்போக்களுக்குச் சொந்தமான பஸ்கள் தரிக்கப்படுவதால் நுவரெலியா பஸ் தரிப்பிடத்திலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களின் வருமானம் குறைந்துள்ளன என்றார்.

எனினும் பஸ் தரிப்பிடம் போதுமான இடவசதிகளை கொண்டிருப்பதால் ஏனைய பஸ்கள் தரித்துச் செல்ல இடமளிப்பது அவசியம் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் நுவரெலியா இ.போ.ச பஸ் பணியாளர்கள் ஆரம்பித்துள்ள பணிபகிஷ்கரிப்பால் ஹட்டன், கொத்மலை, கெப்பட்டிபொல, பண்டாரவளை, பதுளை ஆகிய பஸ் டிப்போக்கள் நுவரெலியாவுக்கான தமது போக்குவரத்து சேவையை இடைநிறுத்தியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, இரு தரப்பையும் அழைத்து பொலிஸார் கலந்துரையாடிய போதும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ஹட்டனில் மலையக அரசியல் அரங்கத்தின் ஏற்பாட்டில்

## வி.கே வெள்ளையன் நினைவுப்பேருரை

முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜாவை தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு இயங்கி வரும் மலையக அரசியல் அரங்கம், அதன் ஓராண்டு பூர்த்தி நிகழ்வை நவம்பர் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் நகர சபை மண்டபத்தில் சிறப்பு நிகழ்வாக கொண்டாடவுள்ளதாக அரங்கத்தின் செயலாளர் நா. கிருஷ்ணகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி இருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மலையகத்தில் அறிவார்ந்த அரசியல் உரையாடலை ஏற்படுத்துவது, மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியலை முன்வைப்பது, ஆண்களுக்கு சமனாக பெண்களுக்கும் அரசியலில் சமவாய்ப்பு வழங்குவது, அடுத்த தலைமுறை அரசியலுக்கு பாலமாக செயற்படுவது எனும் இலக்குகளைக் கொண்டதாக 2021 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி தொடங்கப்பட்ட மலையக அரசியல் அரங்கம், எதிர்வரும் 27ஆம் திகதி தனது ஓராண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

கடந்த ஓராண்டு காலத்தில் பல்வேறு களப்பணிகளை முன்னெடுத்துள்ள அரங்கம், ஒவ்வொரு மாதமும் இறுதி வாரத்தில் மெய்நிகர் உரையரங்கங்களை நடத்தி வந்தது. மலையகத்தின் அரசியல் - தொழிற்சங்க - இலக்கிய ஆளுமைகள் பலரை நினைவு கூர்ந்து ஆற்றப்பட்ட இந்த உரைகளை துறைசார் ஆளுமைகள் வழங்கினர். அடுத்த நூற்றாண்டுக்கான மலையக அரசியல் உரையாடல் வெளியில் பேசப்படவேண்டிய, பேசுபொருளாக வேண்டிய விடயதானங்கள் உரையரங்கத் தலைப்புகளாக்கப்பட்டு வளவாளர்களுடன் உரையாடல்களும் இடம்பெற்றன.

அதேநேரம் முதலாவது ஆண்டு நிறைவை சிறப்புக்கும் வகையில் தொழிற்சங்கத் துறவிஅமரர் வி.கே வெள்ளையன் நினைவுப் பேருரையாக 'மலையக மக்களின் காணி உரிமையும் சிறுதோட்ட உடமையாளராதலின் அவசியமும்' எனும் தலைப்பில் நேரடி உரையரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான விக்டர் ஐவன் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார்.

'இளைஞர்களினதும் பெண்களினதும் அரசியல் பங்கேற்பும், பங்களிப்பின் அவசியமும்' எனும் தலைப்பில் சிறப்புக் கருத்துப் பகிர்வினை சட்டத்தரணி சஞ்சுளா பீட்டர்ஸ் வழங்க உள்ளார்.

## நபரை பதம் பார்த்த பழம் வெட்டும் கத்தி

பாலித ஆரியவன்ஸ

பதுளை மத்திய பஸ் தரிப்பிடத்திலுள்ள கழிவறை பணியாளர், குறித்த பஸ் தரிப்பிடத்தில் பழக்கடை நடத்திச் செல்லும் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (22) காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்து தாக்குதலை நடத்திய நபர் கைதுசெய்யப்பட்டு பதுளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், காயமடைந்த நபர் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெண்ணொருவர் தொடர்பில் இருவருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தச் சம்பவத்துக்கு காரணமாகியுள்ளது என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மக்களிடம் வாக்குகளைப் பெற்று

## நாம் சும்மா இருக்கவில்லை

### என்கிறார் இராதா எம்.பி

எஸ்.கணேசன்



மக்களிடம் வாக்குகளைப்பெற்றுவிட்டு நாம் சும்மா இருக்கவில்லை. பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மக்களுக்காக செயற்படுகின்றோம்; குரல் எழுப்புகின்றோம். மலையக மக்களின் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபை வரை இன்று கொண்டுசென்றுள்ளோம் என மலையக மக்கள் முன்னணியின தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இராகலை பிரதேசத்தின் மலையக மக்கள் முன்னணியின் தோட்ட தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆகியோருடனான சந்திப்பு நேற்று முன்தினம் (21) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்டப் பகுதிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 63 சதவீத மக்கள் நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளனர் என சர்வதேச அமைப்புகளின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இது தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி அநுரகுமாரவும், மனோ கணேசனும் கூட்டு பிரேரணையைக் கொண்டுவந்தனர். இவ்விவாதத்தில் பங்கேற்று எமது மக்களின் பிரச்சினைகளை நாம் பட்டியலிட்டோம்.

ஒரு சிலர் இதனை விமர்சிக்கின்றனர், மலையக மக்கள் பிற்படுத்தப்பட்ட சமூகம் அல்ல என குறிப்பிடுகின்றனர். இந்த பிற்படுத்தப்பட்ட சமூகம் என்பது இந்தியாவில் சாதி அடிப்படையில் ஒதுக்கப்படுவது. அந்த முறை இலங்கையில் இல்லை. மலையக மக்கள் பின்நிலைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையே நாம் கூற விளைந்தோம் என்றார்.



## சப்ரகமுவ மாகாணத்தில் மாணவர்களுக்கு பால்

சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள 60 ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு இலவசமாக பால் வழங்கும் செயற்றிட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்று (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல, கங்குல்விட்டிய மகா வித்தியாலயத்திலும் கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட, அடலுகம்வெல வித்தியாலயத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண முன்னாள் அமைச்சர் ரஞ்ஜித் பண்டார உட்பட பிரதேச சபை தலைவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொன்னநகர் வீதியை புனரமைத்து தரவும்

சுதத்.எச்.எம்.ஹேவா



ஹட்டன், பொன்னநகர் பகுதிக்குச் செல்லும் வீதியானது மிகவும் சேதமடைந்துள்ளது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாக வாகனங்களில் மாத்திரமல்லாது நடந்து செல்வதும் சிரமம் என பொன்னநகர் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இந்த வீதியை புனரமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கண்டியில்

## அரசியல்வாதிகளின் சிபாரிசில் மாணவர்கள் அனுமதி

### விசாரணைகளை ஆரம்பித்தது அமைச்சு

ஷேன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலைக்கு சுமார் 200 மாணவர்கள் சட்டவிரோதமாக சேர்த்துக்கொள்ளப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் கல்வி அமைச்சுக்கு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

வகுப்பு ஒன்றில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை விட மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதால் மாணவர்களைப் போலவே ஆசிரியர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருப்பதாக மாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, பாடசாலை வரவு ஆவணம் உள்ளிட்ட ஏனைய ஆவணங்கள் விசாரணை அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

தரம் 7,8,9 ஆகிய வகுப்புகளுக்கே இவ்வாறு சட்டவிரோதமாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் ஒரு சில வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை 60ஐக் கடந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச அரசியல்வாதிகள் இருவர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலரின் கடிதங்களை அடிப்படையாக வைத்தே இவ்வாறு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

டெல் தோட்ட இளைஞர்கள்

## மூவர் பொலிஸில் இணைந்தனர்

துவாரகஷான்

அக்கரப்பத்தனை டெல் தோட்டத்திலிருந்து முதல் தடவையாக இலங்கை பொலிஸ் சேவைக்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இங்குள்ள மாணவர்கள் உயர்க்கல்வியை கற்க வேண்டுமானால் கால்நடையாக பத்து கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்ல வேண்டும். இவ்வாறான கஷ்டத்தின் மத்தியில் கல்வி கற்று முதல் தடவையாக மூன்று பேர் இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜெயகுமார் தர்ஷன், பாலச்சந்திரன் பிரதீப், சிவகுமாரன் லீபன் ஆகிய மூவரும் கொழும்பு, ஹம்பாந்தோட்டை, பாணந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு தெரிவாகியுள்ளனர்.



இவ்வாறு தெரிவாகிய இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தோட்ட பொதுமக்களின் ஏற்பாட்டில் தோட்டத் தலைவர் எஸ். சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மூவருக்கும் மலர்மாலை அணிவித்து பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து தோட்ட பொது மக்கள் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைத்தனர்.

# பொறுப்புமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டியது ஆசிரியர்களே!

பல்வேறான சிரமங்கள், நெருக்குதல்கள், போராட்டங்களுக்கு மத்தியில் ஒவ்வொரு மாணவரையும் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்காக, தங்களுடைய வாழ்நாளை ஒவ்வோர் ஆசிரியரும் கழித்துவிடுகின்றார்.

அதனால்தான் மாதா, பிதாவுக்கு அடுத்ததாக குருவை, ஒவ்வொரு மாணவரும் தெய்வமாக மதிக்கின்றனர். கல்விகற்று நல்ல நிலையிலிருக்கும் எந்தவொருவரும் தங்களுக்கு கற்பித்த ஆசான்களை என்றென்றும் மறப்பதே இல்லை.

கற்பித்தலுக்கு அப்பால், ஒழுக்கத்தையும் ஒன்றுகலந்து ஊட்டிவிடுவார். அவ்வாறு கொஞ்சம், கொஞ்சமாக செதுக்கப்பட்ட மாணவர்கள், ஒழுக்கநெறியை முறையாக கடைப்பிடித்து நல்லதொரு நிலைக்குச் சென்றுவிடுகின்றனர்.

விரல்களில் நகங்கள் வெட்டப்பட்டுள்ளனவா, தலைமுடி முறையாக வெட்டப்பட்டுள்ளதா, பாதணிகளை அணிந்து வருகின்றனரா, அப்பாதணிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளனவா என்பதையெல்லாம் ஒருசில ஆசிரியர்கள் அவதானிப்பர்; ஒழுக்கக் குழுவும் இருக்கும்.

ஆசிரியர்கள் அவதானிப்பதைப் போல, ஆசிரியர்கள், ஆசிரியைகள் நேர்த்தியாக உடையணிந்து இருக்கின்றனரா என்பதை மாணவர்களும் அவதானிப்பர். நேர்த்தியாக உடையணியும் போதுதான், ஆசான்கள் மீது மாணவர்களுக்கு ஒருவிதமான பயமும் மரியாதையும் பிறக்கும்; கற்பதிலும் ஆர்வம் காட்டுவர்.

மேலதிக, அல்லது தனியார் வகுப்புகளை நடத்தும் போதுகூட ஆசிரியர்களில் பலர், சாதாரண உடைகளில் செல்வதை தவிர்த்தே விடுகின்றனர். எனினும், சில பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியைகளில் சிலர், சாறியை தவிர்த்துவிட்டு சாதாரண உடைகளில் சென்றுள்ளதுடன், ஆசிரியர்கள் சிலர், ரிசேட் அணிந்து சென்றிந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன.

வாரமொன்றுக்கு ஐந்து நாள்களும் பாடசாலைக்குச் செல்லும் ஆசான்கள் ஒவ்வொரு நாளும் தனித்தனி ஆடைகளை அணியவே வேண்டும். பொருளாதார நெருக்கடியில், அவ்வாறு கொள்வனவு செய்யமுடியாது. ஆசிரியைகளைப் பொறுத்தவரையில் சாறிக்கேற்ற வகையில் ஏனைய உடைகளுக்கும் செலவழிக்க வேண்டும்.

எனினும், நமது நாட்டின் கலாசாரத்தின் பிரகாரம், சாதாரண உடைகளில் ஆசான்கள் பாடசாலைக்குச் செல்வதால், மாணவர்களிடம் மதிப்பு, மரியாதை, அச்சம் உள்ளிட்டவை குறையும். மனப்பயம் ஏற்படாது. ஆகையால், கண்ணியமான உடையை அணிவதே சிறந்தது.

அரச அலுவலகங்களில் எளிதான மற்றும் கண்ணியமான உடையில் பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்டுள்ள ஆடைக் கட்டுப்பாடு சுற்றறிக்கை, பாடசாலை ஆசிரியர்களுக்கு பொருந்தாது என பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய அரச துறையினருக்கும் ஆசிரியர் சமுதாயத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

சில துறைகளைச் சேர்ந்தவர்கள் கடமையோடு நின்றுவிடுவர். கற்பித்தலுக்கு அப்பாற்சென்று சமூகத்தின் பாதுகாவலராக விளங்குபவர்களில் முன்னணியில் இருப்பவர்கள் ஆசான்கள்.

ஒருசில நாடுகளில் ஆசிரியர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அந்தளவுக்கு நாட்டுக்காகவும் மனித சமூகத்துக்காகவும் அவர்கள் தங்களையே அர்ப்பணிக்கின்றனர். பொறுப்புமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு, ஆசான்களை மட்டுமே சாரும் என்பதை நினைவில் கொள்க!

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தகுதியற்றவர்களும் கௌரவப்படுத்தப்படுகின்றனர். உண்மையான தகுதியுள்ளவர்களை அநேகர் கண்டுகொள்வதில்லை.

விசித்திரமான சனங்களைக் கொண்டதே இந்தப் பூமி. பணம், பொருளைக் கொண்டவர்களை உயர்நிலையில் வைத்திருப்பார்கள். இவர்களில் எல்லோருமே பூமியை வாழவைக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் இல்லை.

இத்தகையவர்களைக் கண்டால், வளைந்து, குனிந்து, அடிமைபோல தங்களை ஆக்கிக் கொள்பவர்களின் செயல்கள் வேடிக்கையானவை.

உறக்க நிலையில் அறிவை வைத்திருக்கும் நபர்கள், இங்கு என்ன நடக்கிறது எனத் தெரியாது இருக்கின்றார்கள்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தகுதி குறித்து, பெரும்பாலான வாக்காளருக்குத் தெரிவதில்லை. ஏனோதானோ என வாழக்கூடாது. வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைத் தானே பெறுமதி உள்ள நபராக மாற்றிக்கொள்ள வேண்டும்.

கிடைத்த வாழ்க்கையை புத்திசாலித்தனமாக, எவரையும் காயப்படுத்தாமல், உண்மையானவராகத் தன்னை உருவாக்குவதே பேரறிவாகும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# குட்டையை குழப்புவாரா பசில்?



எம்.எஸ்.எம் ஐயூப்

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஞாயிற்றுக்கிழமை (20) நாடு திரும்பிய போது அவரை வரவேற்க, கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்த கூட்டத்தைப் பார்க்கும் போது, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவைப் பார்க்க, மக்கள் சாரிசாரியாக திஸ்ஸமகாராமையிலுள்ள 'கால்டன்' என்று பெயரிடப்பட்டுள்ள அவரது இல்லத்துக்குச் சென்றமை நினைவுக்கு வருகிறது.

இரண்டும், மீண்டும் தலைதூக்கும் நோக்கத்தில் அவர்களே ஒழுங்கு செய்த கூட்டங்களாகும். மக்கள் தாமாக அன்று மஹிந்தவைப் பார்க்கச் சென்றிருந்தால், ஹம்பாந்தோட்டையிலுள்ள அவரது வீட்டில், அவர் இருக்கும் போது, அங்கு சென்றிருக்க வேண்டும்.

அதேவேளை, தேர்தல் தோல்வியை அடுத்து, சில நாள்களுக்குப் பின்னர்தான், நாட்டில் நாலாபக்கத்தில் இருந்தும், திடீரென மக்கள் அவரைப் பார்க்கச் சென்றனர். அதேபோல், சில நாள்களுக்குப் பின்னர், அவர்கள் அங்கு செல்வதைத் திடீரென நிறுத்திக் கொண்டனர்.

பசில், தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் வழக்கொன்றின் காரணமாக, நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று, செப்டெம்பர் மாதம் அமெரிக்காவில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றார். அன்று அவர் நாட்டை விட்டு வெளியேறும் போது, மக்கள் கூட்டம் விமான நிலையத்துக்குச் செல்லவில்லை. அவர் மீண்டும் நாடு திரும்பும் போது, எதையும் சாதித்துவிட்டு வரவும் இல்லை.

பிளவுபட்டு இருக்கும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை மீண்டும் ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடனேயே அவர் நாடு திரும்பியுள்ளார் என்று பொதுஜன பெரமுனவினர் கூறுகின்றனர். ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர், நாடு திரும்ப வேண்டும் என்ற நீதிமன்றத்தின் நிபந்தனையின் பேரிலேயே அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். எனவே, கட்சி பிளவுபட்டு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் நாடு திரும்பியே ஆக வேண்டும்.

அதேவேளை, அவர் அமெரிக்காவுக்குச் செல்லுமுன்னரே கட்சி பிளவுபட்டுத் தான் இருந்தது. எனவே அவரது வருகையின் நோக்கத்துக்கும் கட்சியின் பிளவுக்கும் எவ்வித் தொடர்பும் இருப்பதாக தெரியவில்லை.

மறுபுறத்தில், கட்சியின் பிளவுக்கு பிரதான காரணமாக இருந்தவரும் அவரே! விமல் வீரவன்சவின் தலைமையிலான குழுவும் டலஸ் அழகப்பெருமவின் தலைமையிலான குழுவும் அவரால் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாகவே, ஆளும் கட்சியிலிருந்து இவர்கள் விலகினர். எனவே, அவரால் கட்சியை மீண்டும் ஐக்கியப்படுத்த முடியுமா என்பதும் சந்தேகமே.

அந்தக் குழுக்கள் நேர்மையானவை என்பது இதன் அர்த்தம் அல்ல. கோட்டாவின் அரசாங்கத்தில் விமல், கம்மன்பில் போன்ற இனவாதிகளும் வாசுதேவ போன்றவர்களும் ஒதுக்கப்பட்டு, அதிகாரத்தை பாவித்து பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போனமையே, அவர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறக் காரணமாகியது.

2005ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்களின் போது, மஹிந்தவின் பிரசார வேலைகளுக்குப் பெறுப்பாக டலஸே இருந்தார். மஹிந்தவின் காலத்தில் அவருக்கும் அவருடன் இன்று சேர்ந்து இருக்கும் ஜீ.எல். பீரிஸூக்கும், அரசாங்கத்தில் முக்கிய இடம் இருந்தது. அக்காலத்தில்தான் போர் நடைபெற்றது, பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்; காணமாமற்போனார்கள். இந்தக் குழுவினரும் அந்த மனித உரிமை மீறல்கள் அத்தனையையும் நியாயப்படுத்தினர்.

போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நியாயம் கேட்டு ஜெனீவா சென்ற போது, அதை நாட்டுக்கு செய்த துரோகமாக சித்திரிப்பதில், இவர்களும் அரசாங்கத்தில் ஏனையோருடன் இணைந்து செயற்பட்டனர். இன்று ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து செயற்படும் அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட குழுவினர் தொடர்பாகவும் இந்த விடயங்கள் பொருந்துகின்றன.

அரசியல் ரீதியாக, பசில் தோல்வியடையவில்லை என்று நாம் இதே பத்தியில் முன்னர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். காரணம், மிகவும் மோசமாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மஹிந்த பிரிவு வீழ்ச்சியடைந்திருந்து, தாமும் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு கடந்த அரசாங்கம் சட்டம் கொண்டு வந்து இருந்த நிலையிலேயே, அவர் புதிதாக கட்சியொன்றை ஆரம்பித்து, இரண்டு வருடங்களுக்குள் நாடளாவிய தேர்தல் ஒன்றில், பாரியளவில் வெற்றி பெறும் வகையில் அந்தக் கட்சியை கட்டி எழுப்பினார்.

அப்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம், பொருளாதார துறையிலும் ஊழல்களை ஒழிப்பதிலும் தோல்விகண்ட நிலையில், மஹிந்தவுக்கு அது இலேசாகியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறு தோல்விகண்டால், பொதுஜன பெரமுன ஆளும் கட்சியாக இருந்த போதிலும், எல்லாப் பாவங்களையும் ரணிலின் தலையில் போட்டு, மீண்டும் தலைதூக்க பசிலின் தலைமையில் அக்கட்சி முயலலாம்.

இலங்கை மக்களின் அரசியல் அறிவின் தரத்தைப் பார்க்கும் போது, அது வெற்றியளிக்கவும் கூடும்.

சிறுபான்மை மக்களின் கண்ணோட்டத்தில் பிரச்சினையைப் பார்ப்பதில், ராஜபக்ஷ குடும்பத்தில் மிகவும் நல்லவர் பசில் ராஜபக்ஷவேயாவார். கோட்டாபய மிக மோசமான இனவாதி. மிருசுவிலில் சிறு பிள்ளைகள் உள்ளிட்ட ஒரு குடும்பத்தையே கழுத்தை அறுத்து கொன்றதற்காக நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு இருந்த சுனில் ரத்னாயக்க என்ற இராணுவ வீரனை, 'சிங்களவர்' என்ற ஒரே காரணத்துக்காக அவர் விடுதலை செய்தவர்.

மஹிந்த படுசந்தர்ப்பவாதி. 'தேர்ட்டீன் பிளஸ்' என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களை சதா ஏமாற்றிக் கொண்டு இருந்தவர். அவரும் கோட்டாவும் போர் விடயத்தில் முடிவு எடுக்கும் நிலையில் இருந்த போதுதான், சரணடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

பசிலுக்கு இனம், மதம் போன்ற விடயங்கள் எதுவும் முக்கியமல்ல. இதுவரை வெளியாகியிருக்கும் தகவல்களின்படி, அவருக்கு பணம் தான் வேண்டும். அதற்கு அரசியல் பலம் வேண்டும். அவர் இனவாதக் கண்ணோட்டத்தில் எடுத்ததாக கூறக்கூடிய எந்தவொரு முடிவும் இருப்பதாக தெரியவில்லை. அவர் சிறுபான்மை மக்களின் நண்பர் என்பது இதன் அர்த்தம் அல்ல; அந்த வகையில் அவரை ரணிலுடன் ஒப்பிடலாம்.

இப்போது ரணிலால் ஒதுக்கப்பட்டு இருக்கும் பொதுஜன பெரமுனவின் பெரும் ஊழல் பேர்வழிகள், பசிலைக் கொண்டு மீண்டும் தமது விளையாட்டுகளை ஆரம்பிக்கலாம். அவரை வரவேற்கச் சென்றவர்களில் முன்வரிசையில் ஜொன்ஸ்டனும் ரோஹித்த அபேகுணவர்தனவும் இருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

இவர்கள் அதிகார மட்டத்தில் இருந்தால்தான், பசிலுக்கு தேவையானவை நடைபெறும். எனவே, சிலவேளை இப்போது ரணிலுக்கு எதிராக அரசாங்கத்துக்குள் சதிகள் இடம்பெறலாம்.

அடுத்த மார்ச் மாதத்துக்குப் பின்னர், ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அரசியலமைப்பால் கிடைக்கிறது.

அவ்வாறு ரணில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால், தற்போதைய பொருளாதார நிலை காரணமாக பொதுஜன பெரமுன தோல்வியடையலாம். அது ஒன்று மட்டுமே, ரணிலுக்கு எதிரான ஆளும்கட்சியின் சதிகாரர்களை மிரட்டிக் கொண்டு இருக்கிறது.

ஆனால், அவ்வாறு பாராளுமன்றத்தை கலைத்தாலும் ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரிதாக எதையும் சாதிக்க முடியுமா என்பது சந்தேகமே. எனவே, ரணிலும் தமக்கு அந்த அதிகாரம் கிடைத்த உடன் பாராளுமன்றத்தை கலைப்பாரா என்பதும் சந்தேகமே!

இந்தச் சண்டையின் போது, ரணிலின் கை ஓங்கி இருப்பதே சிறுபான்மையினருக்கு நல்லது. ஏனெனில், தற்போதைய பிரதான கட்சிகளில் சிறுபான்மையினர் விடயத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஓரளவுக்காவது ரணிலுக்கு மட்டுமே தேவை இருப்பதாக தெரிகிறது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில், அவர் புதிய அரசியலமைப்பொன்றை வரைய நடவடிக்கை எடுத்தார். அது தொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், அதிகார பரவலாக்கல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டது. ஏனைய தமிழ்க் கட்சிகள் 'சமஷ்டி' என்ற சொல் அதில் இல்லை என்று அதை ஏற்க மறுத்தன.

அந்தச் சொல் இல்லாவிட்டாலும், முன்வைக்கப்பட்ட ஆலோசனை சமஷ்டியைத் தான் குறிக்கிறது என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருந்தது. இதனால் கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ சுமந்திரன் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதிலும், அந்த அரசாங்கம் சற்று ஆர்வம் காட்டியது. மொத்தமாக சகலரையும் விடுதலை செய்வதை தென்பகுதியில் அரசியல்வாதிகள் எதிர்ப்பதால், ஒவ்வொருவராக தனித் தனி நீதிமன்ற நடவடிக்கை மூலம் விடுவிக்க, தமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பின்னர் அதைப் பற்றிக் குறிப்பிடும் போது கூறியிருந்தார்.

அண்மையிலும், ரணில் எட்டு கைதிகளை ஜனாதிபதி மன்னிப்பின் பேரில் விடுதலை செய்தார். இப்போதைக்கு பொதுஜன பெரமுனவினர் ரணிலின் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்ப்பதில்லை.

ஆனால், பசில்-ரணில் மோதல் வளர்ந்தால், இது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதை பசிலின் குழுவினர், அரசியல் இலாபம் கருதித் தடுக்கலாம்.

## கடிதங்கள்

### கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் சேதமடைந்திருக்கும் கூரை

கல்முனை பிரதான பஸ் நிலையத்தின் கூரை, சேதமடைந்து எந்த நேரமும் கீழே விழக்கூடிய நிலையில் காணப்படுவதாக பிரயாணிகள் அச்சம் தெரிவிக்கி-ன்றனர்.



கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து, தினசரி நாட்டின் பல இடங்களுக்கும் பஸ்கள் பயணிக்கின்ற நிலையில், பஸ் நிலையத்தின் கூரையின் ஒரு பகுதி சேதமடைந்து, காற்றுவீசினாலோ அல்லது காகம் போன்ற பறவைகளோ அல்லது எலி, அணில் போன்ற உயிரினங்களோ இந்தக் கூரையில் இருந்தால், கூரை கீழே விழுந்துவிடும் நிலையில் இருப்பது, உயிராபத்தான நிலைமையாகக் காணப்படுகின்றது.

கடலோர பாதுகாப்பு , கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சால் நாட்டிலுள்ள 100 நகரங்களை செழிமைமிக்க நகரங்களாக அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், 18.7 மில்லியன் ரூபாய் செலவில் கல்முனை பஸ் நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையாலும் கல்முனை மாநகர சபையாலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பஸ் நிலையத்தின் கட்டட கூரை சேதமடைந்திருப்பது குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பிரயாணிகள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்

# அமைச்சரவை தீர்மானங்களில் சில...



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (21) கூடிய வாராந்த அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### 01. காப்பகங்கள் தினத்தை பிரகடனப்படுத்தல்

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி 'புவி உயிர்க்கோள காப்பகங்கள் தினம்' யுனெஸ்கோ பொதுச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புவி உயிர்க்கோள காப்பகங்களைப் பாதுகாப்பதற்கான ஊக்குவிப்புகளை ஏற்படுத்துவதற்காக, இவ்வமைப்பின் உறுப்பு நாடுகள் மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென யுனெஸ்கோ அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய, ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி 'தேசிய புவி உயிர்க்கோள காப்பகங்கள் தினம்' பிரகடனப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம்.

### 02. கொள்கையை திருத்தம் செய்தல்

தேசிய ஔடதங்கள் கொள்கை 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு இற்றைக்கு 15 ஆண்டுகளாவதுடன், சமகாலத் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் குறித்த கொள்கையை திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற குழுவின் மூலம் தேசிய ஔடதங்கள் கொள்கையை திருத்தம் செய்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 03. ஆட்களை பரிமாற்றிக் கொள்ளும் ஒப்பந்தம்

1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை நீதிமன்றத்தால் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறையில் தடுத்து வைக்கப்படுகின்ற வெளிநாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு அவர்கள் தத்தமது நாட்டில் தண்டனைகளை அனுபவிக்கக் கூடிய இயலுமை உண்டு. அத்துடன், ஏதேனுமொரு நாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை பிரஜைகளுக்கு எஞ்சியுள்ள தண்டனைக்காலத்தை அனுபவிப்பதற்காக மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரும் ஏற்பாடுகளும் குறித்த சட்டத்தில் காணப்படுகின்றன. அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் குறித்த நாட்டுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வது அவசியமாகும்.

அதற்மைய, இலங்கை மற்றும் மொரிசியஸ் குடியரசுக்கும் இடையில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆட்களை பரிமாற்றிக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 04. ஜனாதிபதி செயலணியை தாபித்தல்

நச்சுப் போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக ஜனாதிபதி செயலணியை தாபிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 05. தேசிய சட்டகம்

சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதார நீண்டகால நல்விருத்திக்காக உற்பத்தியாளர்கள் பேண்தகு வகையில் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், நுகர்வோர் பொறுப்புடனும் புத்திகூர்மையாகவும் உற்பத்திகள் மற்றும் சேவைகளை நுகர்தல் அவசியமாகும். அதற்காக பேண்தகு அபிவிருத்தி நோக்கம் 12 இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு 'பேண்தகு வகையிலான நுகர்வு மற்றும் உற்பத்திகளை உறுதிப்படுத்தல்' அத்தாட்சிப்படுத்துவதற்காக தரநிலைப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் போன்ற விஞ்ஞான ரீதியான முறைகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, உற்பத்திகளின் சுற்றாடல் செயலாற்றுகையை தமது வாடிக்கையாளர் உள்ளிட்ட ஏனைய விநியோகச் சங்கிலியில் தொடர்புபட்டுள்ள தரப்பினர்கள் நம்பத்தன்மையுடன் குறித்த உற்பத்திகளை கொள்வனவு செய்யும் போது, தீர்மானம் எடுப்பதற்கு இயலுமாகும் வகையில் சுற்றாடல் குறிச்சொல் பெயரிடல் தொடர்பான தேசிய சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 06. ஏற்பாடுகளை தயாரிக்கும் சட்டம்

அமைச்சரவையின் அங்கிகாரத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 07. அங்கிகாரத்துக்காக சமர்ப்பித்தல்

1969ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2022/19 ஆம் இலக்க செலுத்தல் முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் 2022/20 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 08. முன்மொழியப்பட்டுள்ள வங்கிகள் சட்டம்

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிதி நிறுவனங்களை நெருக்கடி முகாமைத்துவ சட்டகத்தின் கீழ் (Crisis management framework) வலுவூட்ட வேண்டிய தேவை துரிதமானதும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய பணியாக இலங்கை மத்திய வங்கி அடையாளம் கண்டுள்ளது. நிதிப்பிரிவின் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தலுக்காக தீர்வு சட்டகத்தை பலப்படுத்த வேண்டிய தேவை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறுகிய காலப்பகுதியில் முழுமையான புதிய சட்டமொன்றைத் தயாரிப்பதிலுள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, அனுமதிப்பத்திர உரித்துடைய வங்கித் தீர்வு, வைப்புத்தொகை காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திர உரித்துடைய வங்கிகளின் கணக்குகளை தீர்த்து மூடுதல்/ முடிவுறுத்தலுக்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்திற்கு குறைநிரப்பியாக முன்மொழியப்பட்டுள்ள வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம்.

கடலூர்

# கர்ப்பிணிக்கு கொடூரம்

கடலூர் மாவட்டம் வீராணத்தை சேர்ந்தவர் முரசொலி. இவர் அண்மையில் நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவி இலக்கியாவை உறவினர் ஒருவரின் உதவியுடன், பிரசவத்துக்காக வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது அவர்களை வழிமறித்த போக்குவரத்துப் பொலிஸார், கர்ப்பிணி உட்பட மூன்று பேர், ஒரே மோட்டார் வாகனத்தில் பயணிப்பது விதி மீறல் எனக்கூறி, 1,000 ரூபாய் அபராதம் செலுத்திவிட்டு செல்லுமாறு கூறியுள்ளார்.

எனினும் முரசொலி, தன்னிடம் பிரசவ செலவிற்கு மாத்திரமே பணம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனை பொருட்படுத்தாத குறித்த போக்குவரத்துப் பொலிஸார், "அபராதம் செலுத்திவிட்டுதான் செல்ல வேண்டும்" எனக் கூறி, குறித்த மோட்டார் சைக்கிளின் சாவியைப் பறித்து வைத்துக்கொண்டு, கர்ப்பிணி உட்பட மூவரையும், 1 மணி நேரத்திற்கு மேலாக வீதியோரத்தில் காத்திருக்க வைத்துள்ளனர்.



இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், அங்கு வந்த பொலிஸ் நிலைய ஆய்வாளர் பாலமுருகன், சம்பந்தப்பட்ட போக்குவரத்துப் பொலிஸாரிடம் பேசி, இரு சக்கர வாகனத்தின் சாவியை பெற்றுக்கொடுத்து, கர்ப்பிணியை அவரது கணவருடன் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மூன்று பேர் மோட்டார் சைக்கிளில் செல்வது விதிமீறல் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்தில்லை. விதி மீறலுக்காக அபராதம் விதித்து, சம்பந்தப்பட்ட வாகன ஓட்டியை நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தக்கூறி அனுப்பி வைத்திருக்கலாம், அல்லது கர்ப்பிணியை ஓர் ஆம்புலன்ஸை வரவைத்து மருத்துவமனைக்குள் அனுப்பி வைத்திருந்தால் கூட, இது பாராட்டத்தக்க நடவடிக்கையாக அமைந்திருக்கும் என இச்சம்பவத்தினை நேரில் பார்த்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆந்திரா

# 10 நாள்களுக்குள் இறந்து, 3ஆம் நாள் உயிர்த்தெழுவேன்

## பீதியில் உறைந்த மக்கள்



"பத்து நாள்களுக்குள் இறந்து, மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுவேன்" எனக் கூறிவரும் மதபோதகர் ஒருவர், தனக்கு சமாதியொன்றைக் கட்டுவதற்கான குழியையும் தோண்டி வைத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள கொல்லபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் நாகபூஷணம்.

இவர் அக்கிராமத்தில் உள்ள தேவாலயமொன்றில் நீண்டகாலமாக மதபோதகராகக் கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில் அவர் அண்மைக்காலமாக, "நான் இன்னும் பத்து நாள்களுக்குள் இறந்துவிடுவேன். மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்து விடுவேன்" என்று தெரிவித்து வருவதாக, அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இதற்காகக் குழியொன்றை அவர் தாயார் செய்து வைத்துள்ளார் எனவும், அதன் அருகில், தான் இறந்துவிட்டது போன்று பனர் ஒன்றையும் வைத்திருப்பதாகவும், அவரது நடவடிக்கைகள் அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கேரளா

# FIFA உலக கோப்பைக்காக வீடு வாங்கிய இரசிகர்கள்

கால்பந்து இரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் FIFA உலகக்கோப்பை கால்பந்துத் தொடரானது ஞாயிற்றுக்கிழமை (20) கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமானது.

உலகம் முழுவதிலும் இருந்து 32 நாடுகளின் அணிகள் பங்கேற்றுள்ள இத் தொடரானது, டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இக்கால்பந்துப் போட்டித் தொடரை ஒன்றாக இணைந்து பார்க்க கேரளாவில் உள்ள கால்பந்து இரசிகர்கள் 17 பேர் சேர்ந்து இந்திய மதிப்பில் 23 இலட்சம் ரூபாய்க்கு தனி வீடு வாங்கியுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



கேரள மாநிலம் கொச்சியில் இருக்கும் முண்டக்காமுகல் என்ற சிறிய கிராமத்தில் வசிக்கும் தீவிர கால்பந்து இரசிகர்களே இவ்வாறு FIFA உலகக் கோப்பையை கொண்டாடுவதற்காகவே வீடு வாங்கியுள்ளனர்.

மேலும் இவ்வீட்டின் சுவரில் ஆர்ஜென்டினாவின் கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி, போர்த்துக்கலின் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ றொனால்டோ ஆகியோரின் உருவப்படங்களை வரைந்து அலங்கரித்துள்ளனர்.

அத்துடன் பிரேஸில், அர்ஜென்டினா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் வண்ணங்களில் தங்களது வீட்டிற்கு வர்ணம் பூசியுள்ளனர்.

இது தவிர, கால்பந்து வீரர்கள் பலரின் கட்டவுட்டுகளையும் அவ்வீட்டில் வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பதி

## அனுமதிக்க மறுத்த மருத்துவமனை

# கர்ப்பிணிக்கு வீதியில் பிரசவம்

திருப்பதியில் நிறைமாத கர்ப்பிணியொருவர் பிரசவத்திற்காக அரச வைத்தியசாலையை நாடியுள்ளார்.

எனினும் அவருடன் யாரும் துணைக்கு வராத காரணத்தால் குறித்த வைத்தியசாலை ஊழியர்கள் அவரைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்நிலையில் அவர் சென்ற சிலமணி நேரங்களிலேயே அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.

இதனால் வீதியில் விழுந்து துடித்த அவரைப் பார்த்த சிலர், போர்வைகளை வைத்து மறைப்பு ஏற்படுத்தி, பிரசவம் பார்த்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், "அரசு விதித்துள்ள நிபந்தனையின்படியே நாங்கள் செயற்பட்டோம்"என்று குறித்த மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.



திருவாரூர்

# நிர்வாணப்படுத்திய மகளிர் பொலிஸார்; இளைஞர் எடுத்த விபரீத முடிவு

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி அருகே, மடப்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர் 22 வயதான ராகுல்ராஜ்.

இவர், அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதான சிறுமியொருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் இக்காதல் குறித்து தகவல் அறிந்த சிறுமியின் பெற்றோர், தங்களது மகளுக்கு ராகுல்ராஜ் காதல் தொல்லைக் கொடுப்பதாக திருவாரூர் மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இந்நிலையில், ராகுல்ராஜை அழைத்து விசாரித்த பொலிஸார், அவரை நிர்வாணப்படுத்தி அடித்து, அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதனால் மனம் உடைந்த ராகுல்ராஜ் வீட்டிலிருந்த களைக்கொல்லி மருந்தை குடித்து உயிரை மாய்க்க முயன்றுள்ள நிலையில்,



அவரது குடும்பத்தினர், அவரை மீட்டு திருவாரூர் அரச மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி ராகுல்ராஜ் உயிரிழந்தார்.

இதையடுத்து ராகுல்ராஜின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கதறி அழுதபடியே திருவாரூர் எஸ்.பி அலுவலகத்திற்குள் புகுந்து தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ராகுலின் பெற்றோர் எமது மகளை விடுவிக்க , மகளிர் பொலிஸ் நிலைய உதவி ஆய்வாளர் மகாலட்சுமி 20,000 ரூபாய் லஞ்சம் கேட்ட தாகவும், ஆனால் தாம் 5,000 ரூபாயை மாத்திரமே கொடுத்ததாகவும், அப் பணத்தைப் பெற்றுக்கொண்டே விசாரணை என்ற பெயரில் அவர்கள் ராஜ்குமாரை அடித்து அவமானப்படு த்தியதாகவும், இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளான தங்கள் மகன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எமது மகனை தற்கொலைக்குத் தூண்டிய குறித்த மகளிர் பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டால் மாத்திரமே, ராகுலின் உடலை வாங்குவோம் எனவும் கூறி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அறிமுகமாகும் 'அர்பேனியா வேன்'

இந்தியாவில் வெகு விரைவில் ஃபோர்ஸ் (Force) நிறுவனத்தின் அர்பேனியா (Urbania)வேன் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற Auto Expo வாகனக் கண்காட்சியில் முதல் முறையாக அர்பேனியா வேன் காட்சிபடுத்தப்பட்டது.

இந்திய மதிப்பில் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட அர்பேனியாவின் தொடர் உற்பத்தி, தற்போது




டீலர்ஷிப்களுக்கு விரைவில் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முதல் முறையாக இவ்வகை வாகனங்களில் ஓட்டுநர் மற்றும் ஓட்டுநருக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்பவருக்கும் ஏர்பேக் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலகக் கிண்ணம்:

# நெதர்லாந்தை வென்ற செனகல்

கட்டாரில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற செனகல் உடனான குழு ஏ போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வென்றது.

நெதர்லாந்து சார்பாக, கோடி கக்போ, டேவி கிளாசென் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவுக்கும், வேல்ஸுக்குமிடையிலான குழு பி போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. அமெரிக்கா சார்பாகப் பெறப்பட்ட கோலை திமோதி வெயா பெற்றிருந்ததோடு, வேல்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை கரெத் பேல் பெற்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஈரானுடனான குழு பி போட்டியில் 6-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வென்றது. இங்கிலாந்து சார்பாக, புகாயோ ஸாகா இரண்டு கோல்களையும், ஜூட் பெல்லிங்ஹாம், ரஹீம் ஸ்டேர்லிங்க், மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், ஜக் கிரெலிஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஈரான் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் மெஹ்டி தரெமி பெற்றிருந்தார்.

இதேவேளை, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எஃப் போட்டியில் மொரோக்கோவும், குரோஷியாவும் மோதவுள்ளதுடன், மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஈ போட்டியில் ஜேர்மனியும், ஜப்பானும் மோதவுள்ளதுடன், இரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஈ போட்டியில் ஸ்பெய்னும் கொஸ்டா ரிக்காவும் மோதவுள்ளன. நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எஃப் போட்டியில் கனடாவை பெல்ஜியம் எதிர்கொள்கிறது.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

## இங்கிலாந்தை வெள்ளையடித்த அவுஸ்திரேலியா



ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்தை அவுஸ்திரேலியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்றிருந்த அவுஸ்திரேலியா, நேற்று மெல்பேணில் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றதையடுத்தே 3-0 என இங்கிலாந்தை வெள்ளையடித்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜொஸ் பட்லர், அவுஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, இடையில் மழை காரணமாக இரண்டு ஓவர்கள் குறைக்கப்பட்ட நிலையில், ட்ரெவிஸ் ஹெட்டின் 152 (130), டேவிட் வோர்னரின் 106 (102), மிற்செல் மார்ஷின் 30 (16), ஸ்டீவ் ஸ்மித்தின் 21 (16) ஓட்டங்களோடு 48 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 355 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில், ஒலி ஸ்டோன் 4, லியாம் டோஸன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



தேசிய ரீதியிலான மல்யுத்தப் போட்டியில்

## வென்ற சிவானந்தா பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு

வா.கிருஸ்ணா

தேசிய ரீதியான மல்யுத்தப் போட்டியில் தங்கப் பதக்கமொன்றையும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும், வெண்கலப் பதக்கமொன்றையும் பெற்ற மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையின் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வானது அண்மையில் நடைபெற்றது.

இராம கிருஷ்ண மிஷனில் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் மகராஜினால் வழிபாடுகள் நடாத்தப்பட்டு சாதனையாளர்களுக்கு ஆசிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மிஷனிலிருந்து மாலைகள் அணிவிக்கப்பட்டு பாடசாலை வரையில் பான்ட் வாத்தியங்களுடன் மாணவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் அதிபர் சுவர்ணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில், மல்யுத்தப் போட்டியில் தேசிய சாதனை படைப்பதற்கு உறுதுணையாகயிருந்த சாண்டோ விளையாட்டுக் கழகத் தலைவரும் மல்யுத்த பயிற்றுவிப்பாளரும் ஆசிரியருமான திருச்செல்வமும் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, தேசிய பாடசாலை களுக்கிடையிலான விளையாட்டு, தேசிய தமிழ்த் தினப் போட்டி, மாகாண மட்ட போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதோடு, தேசிய தமிழ்த் தினப் போட்டியில் மாணவர்கள் வெற்றிவாகை சூடுவதற்கு காரணகர்த்தாவாகயிருந்த சங்கீத ஆசிரியை திருமதி ஜெயஷி கலிங்கேஸ்வரன், ஏனைய பிரிவுகளில் மாணவர்களை வழிநடாத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நியூசிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய இந்தியா



நியூசிலாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாததோடு, இரண்டாவது போட்டியில் இந்தியா வென்றிருந்ததோடு, நேற்று நேப்பியரில் நடைபெற்ற மூன்றாவது போட்டியானது மழை காரணமாக டக்வேர்த் லூயிஸ் முறைப்படி சமநிலையான நிலையிலேயே 1-0 என தொடரை இந்தியா கைப்பற்றியது.

நியூசிலாந்து: 160/10 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவொன் கொன்வே 59 (49), கிளென் பிலிப்ஸ் 54 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/17 [4], அர்ஷ்டீப் சிங்க் 4/37 [4], ஹர்ஷால் பட்டேல் 1/28 [3.4], தீபக் ஹூடா 0/3 [1])

இந்தியா: 75/4 (9 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹர்டிக் பாண்டியா ஆ.இ 30 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 2/27 [3], இஷ் சோதி 1/12 [2], மிற்செல் சான்ட்னெர் 0/5 [1], லொக்கி பெர்கியூசன் 0/8 [1])

போட்டியின் நாயகன்: மொஹமட் சிராஜ்

இந்தோனேசியா

# இந்தோனேசியாவில் பயங்கரம்; 252 பேர் உயிரிழப்பு

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் நேற்று முன்தினம்(21) ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 252 ஆக அதிகரித்துள்ளது.

சியாஞ்சுர் நகரில், பூமிக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நேரிட்ட இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவில் 5.6 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தால், 4 பாடசாலைகள் மற்றும் 52 குடியிருப்புகள் பலத்த சேதமடைந்த நிலையில், இடிபாடுகளில் சிக்கி சுமார் 700 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் நேற்றைய தினம்(22) சாலமன் தீவுகளில் 7.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாலமன் தீவுகளில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இந்தோனேசியா

## 190 கிலோவில் 87 கிலோவுக்கு மாறிய சாதனைச் சிறுவன்

'உலகிலேயே அதிக உடற்பருமன் கொண்ட சிறுவன்' என அறியப்பட்ட ஆர்யா பர்மனா தனது நிறையை 190 கிலோகிராமில் இருந்து 87 கிலோகிராமாகக் குறைத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

இந்தோனேசியாவை சேர்ந்த ஆர்யாவுக்கு தற்போது 16 வயது எனக் கூறப்படுகின்றது.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் 190 கிலோ கிராம் எடையில் இருந்துள்ளார். இந்நிலையில் ஆர்யாவின் 6 வருட கடின உழைப்பால் தற்போது அவரது உடல் எடையை 87 கிலோவாக குறைத்துள்ளார்.

ஆர்யாவின் இம் மாற்றத்தில் பிரபல உடற் பயிற்சியாளர் அடே ராய்க்கு பெரும் பங்கு உண்டு எனவும், அவர் கடந்த 2016 ஆம் ஆண்டில் இருந்து ஆர்யாவுக்கு உடல் எடை குறைப்பதற்கான பயிற்சிகளை அளித்து வருகின்றார்.

இது குறித்து அடே ராய் கூறுகையில், "நான் ஆர்யாவை மிகவும் மனதார பாராட்டுகிறேன். அவர் விளையாட்டுகளை மிகவும் விரும்புகிறார். அவருக்கு காற்பந்து மிகவும் பிடிக்கும். இதனால் விளையாட்டில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்.. அத்துடன் தனது உடல் எடையை குறைக்க தினமும் பல பயிற்சிகளை மேற்கொண்டார்.

இது தவிர, உணவு மற்றும் பானங்கள் விஷயத்தில் கட்டுப்பாட்டை கடைபிடித்தார். அதன் விளைவு விரைவில் பல கொடுக்க ஆரம்பித்தது என்றார்.

அத்துடன் "ஆர்யா உடல் எடையை குறைத்தபோது, அதன் பிறகு அவரது உடலில் இருந்து கூடுதல் சதையை அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

இது பேரியாட்ரிக் அறுவை சிகிச்சை மூலம் நிறைவேற்றப்பட்டது. இவ் அறுவை சிகிச்சையின் உதவியுடன், அவரது வயிறு சிறியதாகிவிட்டது" என்றார்.

## 135 வருடங்களுக்குப் பின்



வெளிச்சத்துக்கு வந்த கடிதம்

ஸ்காட்லாந்தின் எடின்பர்க் நகரில் வசித்து வருபவர் எலிட் ஸ்டிம்ப்சன். இவர் அண்மையில் தனது வீட்டில் பிளம்பிங் வேலை செய்வதற்காக சிலரை அழைத்துள்ளார். அவர்கள் அவ்வீட்டின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தரையில் போடப்பட்டிருந்த பலகைகளைப் பெயர்த்து எடுத்துள்ளனர்.


அங்கே பழைய விஸ்கி போத்தல் ஒன்று கிடைத்துள்ளது. இதை வீட்டின் உரிமையாளரிடம் அவர்கள் கொடுத்துள்ளார். முதலில் ஆச்சரியப்பட்ட எலிட் பின்னர் அதனுள் இருக்கும் கடிதத்தை கவனித்துள்ளார்.



சீனா

தொழிற்சாலையில் தீ வி;

## 38 பேர் உயிரிழப்பு



சீனாவின் ஹெனான் மாகாணத்தில் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 38 தொழிலாளர்கள் உடல்கருகி உயிரிழந்தனர்.

அன்யாங் நகரில் உள்ள தனியார் தொழிற்சாலையொன்றிலேயே கடந்த 21 ஆம் திகதி இத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.


இந்நிலையில் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு 63 வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் போராடி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதிகாலை வரை கொழுந்து விட்டு எரிந்த தீயில் கருகி இதுவரை 38 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் பலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

## பொக்கிஷங்களை சூறையாடிய இராணுவம்?



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி , உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 9 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனின் கெர்சனுக்குள் புகுந்த ரஷ்ய இராணுவத்தினர், அங்குள்ள வீடுகளை ஆக்ரமித்துடன் பொருட்களைக் கொள்ளை அடிப்பதாகவும், பொதுமக்களை காலி செய்யுமாறு உத்தரவிட்டு வருவதாகவும் உக்ரேன் குற்றம் சாட்டியிருந்தது.

இதனையடுத்து கெர்சன் நகரில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வரும் நிலையில் தமது இராணுவத்தை வெளியேறுமாறு ரஷ்யா அண்மையில் உத்தரவிட்டது.

இந்நிலையில் கெர்சன் நகரில் உள்ள அருங்காட்சியத்தில் விலைமதிப்பற்ற கலைப்பொக்கிஷங்களை ரஷ்யா கொள்ளையடித்துச் சென்றதாக உக்ரேன் குற்றம் சாட்டியுள்ளது.

> **"கலை அருங்காட்சியத்தில் இருந்து 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த விலையுயர்ந்த ஓவியங்கள்,பழங்கால நாணயங்கள் என 15,000க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருட்களை ரஷ்யப் படைகள் சூறையாடி கிரிமியாவிற்கு கொண்டு சென்றுள்ளனர்**

இதுகுறித்து அந்நாட்டின் கலாச்சார அமைச்சர் ஒலெக்சாண்டர் தாச்செனகோ கூறுகையில் "உக்ரேனில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறுவதற்கு முன்னதாக கெர்சனின் 2 கலை அருங்காட்சியத்தில் இருந்து 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த விலையுயர்ந்த ஓவியங்கள்,பழங்கால நாணயங்கள் என 15,000க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருட்களை ரஷ்யப் படைகள் சூறையாடி கிரிமியாவிற்கு கொண்டு சென்றுள்ளனர்" என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 23 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.